செ.வெ.எண்:31 நாள்:14.12.2017

**பத்திரிகைச் செய்தி**

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தை தவிர்ப்பது தொடர்பான விழிப்புணர்வினை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி 12.12.2017 அன்று ஒரு நாள் ஒட்டுமொத்த கள ஆய்வு (Mass Campaign) நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக உதகை நகராட்சியில் 2 குழுக்கள், குன்னூர் நகராட்சியில் 3 குழுக்கள் , கூடலூர் நகராட்சியில் 1 குழு, நெல்லியாளம் நகராட்சியில் 2 குழுக்கள் மற்றும் பேரூராட்சிகளில் தலா ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் சுற்றுலா மற்றும் வெளியூர் வாகனங்களை ஆய்வு செய்து, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளை பறிமுதல் செய்தனர், மேலும் இந்த ஆய்வின் போது, தடை செய்யப்பட்ட 12.500 கி.கி. எடை கொண்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ஒட்டு மொத்த அபராதத் தொகையாக மொத்தம் ரூ.30,500/- வசூல் செய்யப்பட்டது. இனிவரும் காலங்களில் பொதுமக்களும், சுற்றுலா மற்றும் வெளியூர் பயணிகளும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்துவதைத் தவிர்த்து நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை பாதுகாத்திட ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெ. இன்னசெண்ட் திவ்யா இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**ஒம்/- ஜெ. இன்னசெண்ட் திவ்யா,**
**மாவட்ட ஆட்சியர்,**
**நீலகிரி மாவட்டம்.**

**/உண்மை நகல் / உத்தரவுப்படி /**

**மாவட்ட ஆட்சியருக்காக,**
**நீலகிரி மாவட்டம்.**

E:\D9(SUGANTHI, ASST.)\Mass Raid 2017\Press Release-Mass Raid-24.08.2017.docx